DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.140/2021**

**P.W.4**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ரகுபதி |
| Father Name | : | ஊர்காலன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

( 1, 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மல்லபுரத்தில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் ஒர்க் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன். இறந்து போன இரத்தினவேலுவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரித்த போது எனக்கு வழக்கு பற்றி தெரியாது என்று சொன்னேன்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 24.03.2020ம் தேதி இரத்தினவேல் அவர் வேலை பார்த்த திருப்பூரில் இருந்து கொரோனா காலம் என்பதால் ஊருக்கு வந்திருந்தார் என்றும், 25.03.2020ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு நான், சமயபாண்டி, மணிகண்டன் என்ற மணி மற்றும் நல்லுச்சாமி ஆகிய நாங்கள் எங்கள் ஊர் தேவேந்திர குல வேளாளர் சாவடி அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது இறந்த இரத்தினவேல் அப்பா வெள்ளபாண்டி சாவடி முன்பு

நடந்து சென்ற போது, சந்தானம், அவரது அப்பா செல்லக்கண்ணு, சந்தானத்தின் தாயார்அன்னக்கிளி ஆகியோர்கள் மூவரும் வழிமறித்து ஏன்டா தேவிடியா மகனே உனது மகனால் தான் எனது மகன் வேலை போய்விட்டது என்று கூறி உனது கொல்லாமல் விடமாட்டோம் என்று அசிங்கமாக பேசி சப்தம் போட்டார்கள் என்றும், அப்போது சந்தானம் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்துக்கொண்டு வெள்ளை பாண்டியை பார்த்து உனது மகனை வரச்சொல் என்று சப்தம் போட்டு கொண்டிருந்தார்கள் என்றும், சப்தம் கேட்டு வெள்ளை பாண்டி, அவருடைய மனைவி, அவருடைய மகள் ராதிகா மற்றும் இரத்தினவேல் ஆகியோர்கள் அங்கு வந்தார்கள் என்றும், அப்போது இரத்தினவேலுவை பார்த்து உன்னால் தாண்டா எனக்கு வேலை போச்சு நீ உயிரோடு இருக்க கூடாது என்று சொல்லி சந்தனம் அவர் கையில் வைத்திருந்த கத்தியால் இரத்தினவேலுவின் வலது மார்பகத்திற்கு மேலும், இடது பக்க விலாவிலும் குத்தினார் என்றும், செல்லக்கண்ணு அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து இரத்தினவேலுவின் இடது பக்க முதுகில் குத்தினார் என்றும், அப்போது இரத்தினவேல் இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே சாய்ந்துவிட்டார் என்றும், சம்பவ இடத்திற்கு நான், நல்லுச்சாமி மற்றும் மணிகண்டன் என்ற மணி ஆகியோர்கள் சப்தம் கேட்டு அங்கு ஓடிய போது மேற்படி மூவரும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள் என்றும், அதன் பின்பு மயங்கிகிடந்த பின்பு இரத்தினவேலுவை மணிகண்டன் என்ற மணி டூவிலாரில் ஏற்றிக்கொண்டு அ.சா.3 சமயபாண்டி பின்னால் உட்கார்ந்து இரத்தினவேலுவை பிடித்துகொண்டு எழுமலைக்கு சென்றார்கள் என்றும், நானும், நல்லுச்சாமியும் பைக்கில் பின்தொடர்ந்து சென்றோம் என்றும், பின்னர் எழுமலையில் இருந்து இரத்தினவேலை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சமயபாண்டியும், மணிகண்டன் என்ற மணியும் சேர்ந்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், பின்னர் நாங்கள் இருவரும் வீட்டிற்கு வந்துவிட்டோம் என்றும், மருத்துவமனைக்கு கொண்டு

செல்லப்பட்ட இரத்தினவேல் மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் போது இறந்துவிட்டதாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:47:11 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.